மாலை முரசு

பக்கங்கள் 18+ 03

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 17 வெள்ளிக்கிழமை 03.10.2025 | அதிர்வு 64

## கிளிநொச்சியில் ஆசிரியர் ஒருவர் உயிர்மாய்ப்பு!

கிளிநொச்சி, திருவையாறு பகுதியில் ஆசிரியர் ஒருவர் தீயிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மாகாண சபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துங்கள்

## அநுரவிடம் மனோ வலியுறுத்து

மாகாண சபைத் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் 02▶

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு: வாக்குறுதி கட்டாயம் நிறைவேறும்!

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் என்பன உட்பட தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் எனத் 02▶

# அரியாலையில் குப்பைமேடு அமைக்கும் திட்டத்துக்கு ஊர் மக்கள் கடும் எதிர்ப்பு!

## 8 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தவும் முடிவு

அரியாலையில் குப்பை மேடு அமைக்கும் நல்லூர் பிரதேச சபையின் திட்டத்துக்கு அந்த ஊர் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தமது எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக எதிர் வரும் 8 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பில், அந்த ஊர் மக்களும் அந்த ஊரைச் சேர்ந்த புலம்பெயர் மக்களும் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

உலகமெங்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக மக்கள் போராடி வருகின்றனர். அரியாலையூர் மக்களாகிய நாமும் நமது ஊரைப் பாதுகாப்பதற்காக நமது அழகிய ஊரின் நிலம், கடல், நீர்வளம், தூயகாற்று போன்ற இயற்கையின் கொடைகளை காப்பாற்றுவதற்காகப் போராட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம்.

நல்லூர் பிரதேச சபை, எமது ஊர்மக்களுடன் எந்தவகையிலும் கலந்து பேசாது சூழலை மாசுபடுத்தக் கூடிய குப்பைகளை எமது ஊரில் வீசும் திட்டத்தை ஆரம்பித்திருப்பது எமது ஊர் மக்களால் மட்டுமல்ல இயற்கையையும் மனிதத்தையும் நேசிக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியாகும்.

இயற்கைப் பசளை உற்பத்தி என்ற பெயரில் ஏமாற்றுத்தளமாக எந்த வகையிலும் வகைப்படுத்தப்படாத – மக்காத குப்பைகளை எமது ஊரில் கொட்டி எமது ஊரை குப்பைமேடாக மாற்றும் முயற்சியை நல்லூர் பிரதேச சபை உடனடியாகக் கைவிட வேண்டும்.

எமது இயற்கை வளங்கள் இன்றைய தலைமுறையான எமக்கு மட்டுமானதல்ல, எதிர்கால தலைமுறைக்கும் சொந்தமான வையாகும். எமது ஊரின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியிடம் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு நமது தலைமுறைக்கு உண்டு. இதனால் மக்களுக்கும் இயற்கைக்கும் விரோதமான குப்பை மேட்டுத் திட்டத்தைக் கண்டித்தும் அதனைக் கைவிடக் கோரியும் எதிர்வரும் 8 திகதி மக்கள் அணிதிரள வேண்டும் எனக் கோருகிறோம். – என்றுள்ளது.





# போதைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊர்வலம்!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

செனன் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் போதைப் பொருளுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊர்வலம் மற்றும் வீதி நாடகம் போன்றவற்றை நடத்தினர்.

இன்று (03) வரும் தேசிய மதுஒழிப்பு தினத்தை நினைவு கூரும் வகையில், ஹட்டன், செனன் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் போதைப் பொருளுக்கு எதிர்ப்பு தெரிவித்து விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் வீதி நாடகத்தை ஏற்பாடு செய்தனர்.

இந்த ஊர்வலம் இன்று காலை 10 மணியளவில் ஹட்டன் சந்தியிலிருந்து தொடங்கி செனன் தமிழ் மகா வித்தியாலயத்தை சென்றடைந்தது.

மாணவர்கள் பள்ளிக்கு முன்னால் உள்ள சாலையில் ஒரு சிறப்பு வீதி நடகத்தை நிகழ்த்தினர். அதில் தோட்டப் பகுதி மக்கள் எவ்வாறு போதைப் பொருள்களுக்கு அடிமையாகிறார்கள் மற்றும் அவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்வு பூர்வமாக சித்தரித்தனர். இந்த வீதி நாடகத்தைப் பார்க்க அப்பகுதியைச் சேர்ந்த பலர் கூடினர்.

மாணவர்களின் இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், போதைப் பொருள்களின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் குறித்து சமூகத்திற்கு கல்வி கற்பிப்பதும், ஆரோக்கியமான, போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்குவது ஆகும்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது:-

“மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். தேர்தல் முறைமை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அன்று என்னுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இடம் பிடித்திருந்தார். பழைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு அன்று அவர் இணக்கம் வெளியிட்டிருந்தார்.

எனவே, மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறைமையில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

தேர்தல் முறைமைதான் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக உள்ளது. இதனை இலகுவில் சரி செய்யலாம். நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணையை, அரசு ஏற்று அதனை நிறைவேற்றி இதற்கு வழிசமைக்க வேண்டும்.” – என்றார்.

## இனப்பிரச்சினைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் உறுதியளித்தோம். அந்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எல்லை நிர்ணயம் தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினையைத் தீர்த்துத் தேர்தலை நடத்த வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு மாகாண சபை முறைமை தீர்வு அல்ல என்ற போதிலும் தற்போது அந்த முறைமை இருப்பதால் அதில் கைவைக்கப்பாடாது எனவும், புதிய அரசமைப்பு ஊடாக தற்போது இருப்பதைவிட சிறப்பான தீர்வு வழங்கப்படும் எனவும் நாம் உறுதியளித்துள்ளோம். இந்த உறுதிமொழியும் நிறைவேற்றப்படும்.” – என்றார்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் கிளிநொச்சி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



# ஜனாதிபதி அநுரகுமார தலைமையில் சர்வதேச சுற்றுலா தலைமைத்துவ மாநாடு

சர்வதேச சுற்றுலா தலைமைத்துவ மாநாடு (ITLS) நேற்று பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களுடன் இணைந்ததாக, தேசிய மட்டம் முதல் பாடசாலை மட்டம் வரை பாடசாலை போட்டிகள், ஆராய்ச்சி மன்றங்கள் மற்றும் கைத்தொழில் கண்காட்சிகள் உட்பட, செப்டம்பர் முதல் நடைபெற்ற தொடர்ச்சியான நிகழ்ச்சிகளின் நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. வெளிநாட்டு தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிஞர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

சுற்றுலா அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ், கொழும்பு பல்கலைக்கழக சுற்றுலா பொருளாதாரம் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ பழைய மாணவர் சங்கம் (AATEHM) மற்றும் அதன் நிலைபேறான சுற்றுலா பிரிவு (STU) மற்றும் அந்தப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறை , இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபை (SLTDA), இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB), இலங்கை சுற்றுலா செயற்பாட்டாளர்கள் சங்கம் (SLAITO), இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM) என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. சுற்றுலாத் துறையின் எதிர்காலத்திற்காக சிறு மற்றும் நடுத்தர வணிகத் துறைகளில் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பது இதன் நோக்கமாகும்.

“இலங்கை சுற்றுலாவின் எதிர்காலத்திற்கான சுற்றுலா புத்தாக்கம் மற்றும் உறவுகள்” என்ற தலைப்பில் தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள் மற்றும் புகழ்பெற்ற சர்வதேச நிபுணர்கள் இணைந்த கலந்துரையாடலும் இந்த மாநாட்டுடன் இணைந்தாக நடைபெற்றது.

அகில இலங்கை பாடசாலை சுற்றுலா கழகங்களுக்கிடையிலான மாகாண போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களையும் ஜனாதிபதி வழங்கினார்.

இலங்கையின் பிரதான சுற்றுலாத் தலங்களான தெற்கு,ஊவா மற்றும்

தொடர்ச்சி▼














# ஜனாதிபதி அநுரகுமார தலைமையில் சர்வதேச சுற்றுலா தலைமைத்துவ மாநாடு

தொடர்ச்சி▲

கிழக்கு ஆகிய மூன்று மாகாணங்களையும் இணைத்து சேவை வழங்குநர்களை இணைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட “Ruhunu Ring” இணையத்தளமும் இதன்போது திறந்து வைக்கப்பட்டதோடு “Vision2Voice” சஞ்சிகையும் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டது.

கொழும்பு பல்கலைக்கழகத்தால் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய 10 சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய புத்தகம் இதன் போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுற்றுலா ஆய்வுகள் திட்டங்கள் மற்றும் நிலைபேறான சுற்றுலா பிரிவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சுரங்க டி சில்வா ஜனாதிபதியிடம் கையளித்தார்.

சுற்றுலாத் துறை நிபுணர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டதோடு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு விசேட நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், நாட்டில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் குறிக்கோள் புதிய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் தரமான சுற்றுலாத் துறையை உருவாக்குவதாகும் என்று கூறினார். இளைஞர்களை சுற்றுலாத் துறைக்கு ஈர்க்க பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எமது நாட்டின் கலாசாரம், நாகரிகம் மட்டுமன்றி வேறு எந்த நாட்டிலும் காணப்படாத இலங்கை மக்களுக்கு தனித்துவமான விருந்தோம்பலை உலகிற்கு எடுத்துச் செல்ல சுற்றுலா ஒரு வாய்ப்பை வழங்குகிறது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், அதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான அரசாங்கத்தின் திட்டங்களை தெளிவுபடுத்தினார்.

தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ, சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை (SLTDA) மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் (SLPB) தலைவர் புத்திக ஹேவாவசம், சுற்றுலா பொருளாதாரம் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் நிஹால் முஹந்திரம் உள்ளிட்ட பலர் இந்த நிகழ் வில் கலந்துகொண்டனர்.












# 1,800 மில்லியன் ரூபா நிதி கிழக்கு மாகாண சபைக்கு!

## தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் பிரபு தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு மாகாண சபைக்கு 1800 மில்லியனுக்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் பிரபு றெிவித்துள்ளார்.

எமது அரசு வரவு - செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாண சபைக்கு 1800 மில்லியனுக்கு மேற்பட்ட நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. கிழக்கு மாகாண சபையில் இருக்கும் திணைக்களங்களுக்கு அந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு, தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

மாகாண விசேட நிதி ஒதுக்கீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுபற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தும்பங்கேணி அரச கால்நடை வைத்தியசாலையின் புனரமைப்பு திட்டத்துக்கான ஆரம்ப வேலைகள் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான கந்தசாமி பிரபு பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்த வகையில் கால்நடை திணைக்களங்கள் மற்றும் புதிய ஏனைய செயற்றிட்டங்களுக்கும் பண்ணையாளர்களுக்கும் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 700 நாள்களைக் கடந்தும் மைலத்தமடு, மாதவனை பண்ணையாளர்கள் தொடர்சியாக போராடி வருகின்றார்கள்.

எமது அரசு உருவாகி தற்போது ஒரு வருடம்தான் கடந்திருக்கின்றது. அப்பண்ணையாளர்களின் பிரச்சனைக்குத் தீர்வு பெற்றுத்தருவோம் என நாம் கடந்த தேர்தல் காலத்திலும் குறிப்பிட்டிருந்தோம். அதற்கான முயற்சிகளை நாம் அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், இணைந்து முதற்கட்ட பேற்றுவார்த்தை இடம்பெற்றுள்ளது. அதிலே மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 1600 ஹெக்ரெயர் காணியை முதற்கட்டமாக மேச்சல்தரைக்காக விடுவிப்புசெய்வதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் வெகுவிரைவில் பண்ணையாளர்கள் கோருகின்ற 3000 ஏக்கர் மேய்ச்சல் தரைப் பகுதியை விடுவிப்பதற்கு உரிய முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கின்றோம் என அவர் இதன்போது தொரிவித்தார்.

தும்பங்கேணி கால்நடை வைத்தியர் கதீஸ்காந் யதுஷனாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், விவசாய கால்நடை, நீர்ப்பாசன அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திலகநாதன், தேசிய மக்கள் சக்தியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளரும், சுற்றுலாத்துறை அமைச்சின் மாவட்ட இணைப்பாளருமான வாணி செல்லப்பெருமாள், போக்குவரத்து அமைச்சின் இணைப்பாளர் சனோஜன், மற்றும் போரதீவுப் பற்றுப் பிரதேச சபை உறுப்பினர்களான ஆ.கந்தப்போடி, க.மிருத்தனன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வரவேற்கத்தக்க அறிவிப்பு

வன்னி மாவட்டத்திலே வனவளத் திணைக்களம் போன்றவற்றினுடையவை என அறிவிக்கப்பட்ட 101,762 ஏக்கர் நிலத்தை மக்களுக்காக விடுவிக்க இருக்கின்றோம் என சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசுகளின் காலத்திலும் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட மக்களினுடைய நிலங்களை - குறிப்பாக வன வளத் திணைக்களம் போன்றவற்றினால் - அத்துமீறி ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மக்களுக்கு மீள வழங்குவோம் என்று பொதுப்படையான பல அறிவிப்புகள் வந்திருந்தன.

ஆனால் அவை பெரும்பாலும் வெறும் அறிவிப்புகளாக முடிந்து விட்டன. நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆங்காங்கே காணிகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் அவ்வப்போது ஆரம்பிக்கப்பட்டவாயினும் அவை பெரும்பாலும் செயல்படுத்தப்படவில்லை.

இப்போதும் கூட, இது அறிவிப்புத் தான். இதுவும் செயல்படுத்தப்படுமா என்பதை நடைமுறைல்தான் பார்க்க வேண்டும். ஆனாலும் இந்த அறிவிப்பில் முக்கிய விடயங்கள் அடங்கியிருக்கின்றன.

ஒன்று - கடந்த கால அரசாங்கங்கள் ஜி.பி.எஸ். தொழில்நுட்பம் மூலமாக வடக்கு கிழக்குப் பகுதிகளிலேயே காணி அளவீடுகளை மேற்கொண்டு இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வந்தன என்பதை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரே ஒப்புக் கொண்டு அம்பலப்படுத்தியிருக்கின்றார்.

அடுத்தது - இவ்வாறு அளவீடுகளை மேற்கொள்ளும் போது மீளக் குடியேறிய மக்களின் வாழ்விடங்கள், விவசாய நிலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரசு நிலங்கள் என்பனவும் வனப் பிரதேசங்களுக்குள் உள்வாங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதையும், இதனால் ஒரு பாரிய காணிப்பிரச்சினை ஏற்பட்டுள்ளமையையும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர், அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

அத்தோடு வன்னி நிலப்பரப்பில் மட்டும் இவ்வாறு ஒரு லட்சத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அரசாங்கமே ஒப்புக் கொண்டிருக்கின்றது.

மற்றது - வன்னியில் இவ்வாறு அறிவிக்கப்பட்ட நிலங்களில் மொத்தம் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் மாவட்ட ரீதியாக மூன்று மாவட்டங்களுக்கும் விடுவிக்கப்படும் அளவுகளோடு அமைச்சரவை முடிவாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வகையில் இந்த அறிவிப்பு வரவேற்கத்தக்கது. இந்த அறிவிப்பின் படி அதனை நடைமுறைப்படுத்த அரசு தவறினாலும் கூட, வன வளத் திணைக்களம் போன்றவற்றின் காணி சுவீகரிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வறிவிப்பின் மூலம் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு - சட்ட நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு - செல்ல வாய்ப்புக் கிட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வன வளத் திணைக்களம் போன்றவற்றுக்கு கண்மண் இல்லாத அதிகாரங்களை முன்னைய அரசாங்கங்கள் சட்டங்களின் மூலமாக வழங்கியதன் வாயிலாக ஏற்பட்டுள்ள அராஜகப் போக்கையும் இந்த அறிவிப்பு அம்பலப்படுத்தி இருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றது என்பதற்காக, அந்தப் பெரும்பான்மை மூலம் செய்யப்படுகின்ற சட்டவாக்கங்களுக்கு நீதித்துறை அனுமதி தரும் என்பதற்காக, இத்தகைய அத்துமீறல்களுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டங்களை உருவாக்கி விட முடியும் என்ற நாடாளுமன்ற ஜனநாயக நடவடிக்கைப் போக்கில் உள்ள ஒரு பெருந்தவறையும் இத்தகைய காணி ஆக்கிரமிப்புகள் சட்ட ஒழுங்குகள் ஏற்படுத்தியுள்ளன என்பதையும் அமைச்சரின் அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.



# ஆனமடுவ பிரதேச செயலக புதிய கட்டடம் திறந்து வைப்பு

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஆன மடுவில் சுமார் 160 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட ஆனமடுவ பிரதேச செய லக புதிய கட்டடம் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் டாக்டர் சந்தன அபயரத்ன தலைமையில் புதன்கிழமை (01) திறந்து வைக்கப்பட்டது.

35 கிராம சேவையாளர் பிரிவுகளையும் 140 கிராமங்களையும் உள்ளடக்கிய ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவில் 14,763 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 44,483 மக்கள் வசிக்கின்றனர்.

இந்தப் புதிய பிரதேச செயலக அலு வலக வளாகம் திறக்கப்பட்டதன் மூலம், இந்த மக்களுக்கு தேவையான சேவை களை எளிதாக அணுக முடியும் என்று கட்டடத்தைத் திறந்து வைத்த உரையாற் றிய அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவான் செனரத், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கயான் ஜனக மற்றும் முகமது பைசல், ஆனமடுவ பிரதேச சபை உறுப்பினர்கள், பொது நிர்வாக அமைச்சின் கூடுதல் செயலா ளர்கள், புத்தளம் மாவட்ட செயலாளர், ஆனமடுவ பிரதேச செயலாளர் மற்றும் பல அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.







# தேசிய நிலைப்புக்கான தாதுக்களஞ்சியம்!

இந்தப் பிரபஞ்சத்தின் நிலைப்பு தன்மைக்கு மண்வளம் என்பது இன்றியமையாத ஒரு வகிபங்கினை வகிக்கின்றது. குறிப்பாக மண்வளமின்றி ஒரு நாடு உணவுத் தேவைகளையோ உறையுள் தேவைகளையோ பூர்த்தி செய்ய முடியாது. எனவே நடைமுறை உலகின் செயல்பாடுகளுக்கு மண்ணின் வளம் என்பது அத்தி யாவசியமான ஒன்றாகின்றது.

இதன் அடிப்படையில் சரியான மண்வளம் போசணைப் பொருள்கள் என்பன இன்றிச் சில நாடுகள் நவீன தொழில்நுட்பத்தை நோக்கி நகரும் அதேவேளை, இலங்கைத் திருநாடு தனக்கென உரிய தாராளமான மண்வளத்தைக் கொண்டிருக்கின்றது. இருப்பினும் இந்த வளமான மண் அதற்கு உரிய பாணியில் நம்ம வர்களால் காக்கப்படுகின்றதா? என்பது அண்மைக்கால பாரிய கேள்வியாக உள்ளது.

இலங்கையை பொருத்தமட்டில் ஒவ்வொரு மாவட் டத்தின் காலநிலை வெப்பநிலை என்பவற்றுக்கு ஏற்ற விதத்திலேயே மண்ணானது செம்மையாக அமைந் திருக்கிறது. குறிப்பாக இலங்கையின் மண்வளம் என்ற வகைப்படுத்தலின் கீழ் சிவப்பு மற்றும் மஞ்சள் மண், கரும்பழுப்பு மண், களி மற்றும் வண்டல் மண், மணல் மண், களர் மண் போன்ற வகையீடுகளை அறியக்கூடியதாக உள்ளது. இதனடிப்படையில் இலங் கையின் தனித்துவமான விவசாய வளர்ச்சிக்கும் பொரு ளாதார வளர்ச்சிக்கும் மூலாதாரமாக தொழிற்படுவது இந்த மண்வளமே.

குறிப்பாக இலங்கையின் பல்வகைமையான விவசாயத்துக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடும்போது, இலங்கையின் ஈர மண்டல மத்திய மலைநாடு மற்றும் தென்மேற்கு பகுதிகளில் தேயிலை றப்பர் காய்கள் பயிர் சேகைக்கு உகந்த சிவப்பு மற்றும் மஞ்சள் மண் வகை, வறண்ட மண்டலமான வட, வடமத்திய பகுதிகளில் நெல், உளுந்து, எள் போன்ற விளைச்சலை தரும் கரும்பழுப்பு மண் நெல், கொக்கோ, வாழைப்பழம் போன்ற விழைச்சலைத் தரும் களிமண், வண்டல் மண் வகை மற்றும் வரண்ட பிரதேசங்களில் உள்ள கலர் மண் வகை என்பன இலங்கைக்கு உரிய மண் வகைகள். அதுமட்டுமல்லாது இவையே விவசாய வளர்ச்சிக்குப் பாரிய துணை புரிவனவாக உள்ளன.

இதன் அடிப்படையில் நமக்கே உரிய இந்த மண் வளம் சரியான முறைகளில் பாதுகாக்கப்படுகின்றனவா? என்பதை அறிய நாம் நம்மை வேறு நாடுகளுடன் ஒப்பீடு செய்து பார்ப்பது சாலச் சிறந்தது. ஏனெனில் எதிர்கால நிலைப்புக்கு மண்வளம் என்பது எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்த மேற்குலக நாடுகள் அண்டை நாடுகள் என்பன அந்த மண் வளத்தைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வரு கின்றன.

குறிப்பாக அமெரிக்காவின் மண் காப்பு தொடர்பான சட்டங்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டங்கள், ஆஸ்திரேலியா, நமீபியா, இந்தியா போன்ற நாடுகளின் சட்டங்களாவன சரியான விதத்தில் மண்வள பாதுகாப்பை உறுதி செய்தல், மண்ணைப் பாதுகாப்பதற்கான விவசாய ஊக்குவிப்புகள், மாற்றீட்டு நடவடிக்கைகள், மண்வளத்தைச் சூரையாடுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. மண்வளத்தின் பற்றாக் குறை அதிகமாக இருக்கும் நாடுகள் அதனை சரியான முறையில் பயன்படுத்தி வரும் அதே நேரத்தில் இலங்கையராகிய நாம் நம்மிடத்தே உள்ள வளமான மண்ணை இல்லாத செய்கிறோம் என்பதே நிதர்சனமான உண்மை.

இலங்கையில் நடைமுறையில் மண் பாதுகாப்புச் சட்டம், வனச் சட்டம், வேளாண்மை நிலங்கள் பாதுகாப்புச் சட்டம், சுற்றுச்சூழல் அதிகார சபைச் சட்டம், தேசிய சூழல் சட்டம் என்ற சட்ட அமைப்புகளின் மூலம் நாட்டின் மண் வளத்தைப் பாதுகாத்தல், அகழ்வு முறைமைகள், தொழிற்சாலை செயல்பாடுகள், விவசாய நடவடிக்கைகள் என்பனவற்றில் கரிசனையைக் கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் நடைமுறையில் மந்த கதியில் செல்லக்கூடிய நிலையை அறிய முடிகின்றது. நம் நாட்டைப் பொறுத்தவரையில் அண்மை காலங்களில் பெரும்பாலான இடங்களில் மண் வளத்தினை பாதிக்க கூடிய செயற்பாடுகள் இனங் காணப்பட்டு இருக்கின்றன. மலைநாட்டு பகுதிகளில் இடம்பெறும் காடழிப்பு சம்பவங்கள், கடலோர மணல் அகழ்வு, சட்ட விரோத ஆற்று மணல் அகழ்தல், சட்டவிரோத அகழ்வு செயற்பாடுகள், லாப நோக்கில் அண்மை காலங்களில் உரப்பயன்பாடு என்பனவற்றின் மூலம் நம் மண்ணில் இருக்கக்கூடிய கனிம பொருள் களை நாமே இல்லாத செய்திருக்கின்றோம்.

அதேபோல மண்ணுடைய உண்மையான வளம் குன்றி செயலற்ற நிலை உண்டாகுவதற்கு நாமே காரணம் என்பதே உண்மை. எனவே இதிலிருந்து நாம் மாற வேண்டும் இவ்வாறான விடயங்களை மக்கள் மனதால் நினைத்து இழிவளவாக்குவதன் மூலம் நமது நாட்டின் வளத்தினை குன்ற விடாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும். இல்லாதிருக்கும் போது அவதிப்ப டுவதை விட காற்றுள்ள போதே தூற்றி பயன்பெறுவது சாலசிறந்தது.

**சு.சுஜேந்திரம்,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



# பாஞ்சாலி புகழ் பாடும் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் தீப்பள்ளயம்!

கிழக்கில் தீப்பள்ளயம் என்றால் பட்டி தொட்டி எல்லாம் பறையொலி முழங்க சக்தி மயமாகும் அந்தத் தீப்பள்ளயம் கல்முனையை அடுத்துள்ள பாண்டிருப்பு எனும் பழந்தமிழ் கிராமத்தில் எழுந்தருளியுள்ள திரௌபதி அம்மன் ஆலயத்தில் வருடாந்தம் நடைபெறுவது வழக்கம்.

மகாபாரத இதிகாசத்துடன் தொடர்புடைய கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு மஹோற்சவம் கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கதவு திறத்தல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இலங்கையில் முதன் முதலில் உருவான திரௌபதி அம்மன் கோயில் இதுவாகும். இலங்கையில் அதிகூடிய 18 முழ நீளமான தீக்குழி இங்கு தான் உள்ளது. அங்கு பக்திப் பரவசத்துடன் பாஞ்சாலி பஞ்ச பாண டவர்கள் கிருஷ்ணர் குந்தி தேவி மற்றும் அனுமதிக்கப்பட்ட விரதம் நோற்ற தேவாதிகள் மாத்திரம் தீமிதிப்பில் ஈடுபடுவார்கள்.

இந்த உற்சவம் மகாபாரத போரை நினைவு கூரும் முகமாக தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறும்.

உற்சவத்தில் முக்கிய நிகழ்வுகளாக 30 ஆம் திகதி எட்டாம் நாள் அதிகாலை நாள்கால் வெட்டுதல் நிகழ்வு நடைபெற்றது . பன்னிரெண்டாம் நாளான நாளை 04 ஆம் திகதி கலியாணக்கால் வெட்டுதல் இடம்பெறும். பதினாறாம் நாளான எதிர்வரும் 08 ஆம் திகதி கிருஸ்ணர், பாண்டவர்கள், திரௌபதை தேவாதிகள் சகிதம் வனவாசம் செல்லுதல், பதினேழாம் நாள் 09 ஆம் திகதி அருச்சுனன் பாசுபதம் பெறுவதற்காக தவநிலை செல்லுதல், அரவாணை களப்பலி கொடுத்தல், பதினெட்டாம் நாளான எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை தீப்பள்ளயத்தின் சிகரம் எனப் போற்றப்படும் தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும்.

மறுநாள் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை பாற்பள்ளயம், தருமருக்கு முடி சூட்டுதல் தீக்குழிக்கு பால்வார்க்கும் நிகழ்வு இடம்பெற்று அன்று இரவு 7 மணிக்கு இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் திரௌபதை அம்மன் ஆலயத்தில் இருந்து ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு அம்மன் முத்துச் சப்புறத்தில் எழுந்தருளி ஊர்வலம் செல்லும் நிகழ்வுடன் உற்சவம் நிறைவு பெறவுள்ளது.

**வரலாறு!**

இலங்கையிலே முதன் முதலில் திரௌபதை அம்மனுக்கென ஆலயம் அமையப்பெற்றது பக்தி மணம் கமழும் பாண்டிருப்பிலேயாகும். இந்த ஆலயத்தின் வரலாறு மிகத் தொன்மையானதாகும். வட இந்தியாவில் இருந்து வைஷ்ணவ மதத்தை பரப்பும் நோக்கோடும், மகாபாரத இதிகாசத்தை மக்கள் மத்தியில் நடித்துக்காண்பிக்கும் நோக்கோடும் தாதன் என்னும் மாமுனியும், அவனது ஆட்களும் கடல்வழியே பிரயாணம் செய்து மட்டக்களப்பு பகுதியை வந்தடைந்தனர். பின்னர் அங்கிருந்து அந்த நாளில் நாகர்முனை என்று அழைக்கப்பட்ட திருக்கோயிலை சென்றடைந்து அங்கேயே தங்கியிருந்து மகாபாரத இதிகாசக் கதையை மக்கள் மத்தியில் போதித்து வந்தனர்.

வட இந்தியாவில் இருந்துவந்த தாதன் என்பவன் இங்கு வந்திருப்பதை ஒற்றன் மூலம் அறிந்து கொண்ட அப்போது மட்டக்களப்பு பகுதிக்கு சிற்றரசனாக இருந்த மாருதசேனனுடைய புத்திரன் எதிர்மன்ன சிங்கன் (கி.பி.1539-கி.பி.1583) தாதனைக்கண்டு அவனது வருகை, குலம், நோக்கம், கோத்திரம், நாடு என்பவற்றை விசாரித்திருந்தான்.

தாதனும், தான் வருகை தந்த நோக்கத்தை மன்னனிடம் தெரிவித்து அதற்கேற்ற உகந்த இடம் ஒன்றைத் தேடி வழங்குமாறு மன்னனிடம் கேட்டுக்கொண்டான். மன்னனும் தாதனின் விருப்பப்படியே கடல் வழியே பிரயாணம் மேற்கொண்டபோது அருகே கடலும், ஆலவிருட்சங்களும், கொக்கட்டிமரங்களும் மேற்கே வனப்பகுதியும் காணப்பட்ட பாண்டிருப்பைக் கண்டு அங்கேயே தாம் கையோடு கொண்டுவந்திருந்த திரௌபதை, விஸ்ணு, பாண்டவர்கள் சிலைகளை வைத்து வழிபாடு நடத்தி வணங்கிவந்தான். மன்னனும் தாதனின் வழிபாட்டு முறைக்கு பூரண ஆதரவை தெரிவித்தான்.

அக்காலத்தில் திரௌபதை அம்மன் ஆலயத்தின் மகிமையை கேள்வியுற்ற கண்டி மாநகரை ஆட்சிபுரிந்த அரசனான விமலதர்ம சூரியன் (கி.பி.1594 -கி.பி.1604) இங்குவந்து அம்மனைத் தரிசித்துவிட்டுச் சென்றதாகவும், இந்த ஆலயத்துக்காகத் தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்களைப் பரிசாக அளித்துச் சென்றுள்ளான் எனவும் கல்வெட்டுக்களில் இருந்த அறியக்கிடக்கின்றது.

இந்த நிகழ்வுக்கு நாட்டின் நாலாபாகங்களில் இருந்தும் அதிகளவிலான பக்தர்கள் பாண்டிருப்புக்கு வருகை தருவது வழக்கம். இதனையிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வித்தகர் விபுலமாமணி**
வி.ரி. சகாதேவராஜா,
காரைதீவு நிருபர்.

# சாவகச்சேரியில் பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சத்திர சிகிச்சைகள்

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் நான்கு தினங்கள் பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது என்று சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரப் பிரிவு அறியத்தந்துள்ளது.

எதிர்வரும் 09 ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி பொது மைதானத்தில் ஜே - 300,301,302 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நுணாவில் பொது நூலகத்தில் ஜே - 306, 307, 308 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், 11 ஆம் திகதி சனிக்கிழமை மீசாலை பொது நூலகத்தில் ஜே- 318, 319 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும்,13 ஆம் திங்கட்கிழமை மண்டுவில் செல்வவிநாயகர் சனசமூக நிலையத்தில் ஜே - 303,304 மற்றும் 305 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் தமது பெண் வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொது மக்கள் தங்களது வீடுகளில் காணப்படும் பெண் நாய்களைச் சத்திர சிகிச்சை நடைபெறும் இடத்துக்குக் கொண்டு வந்து பயனடையுமாறு நகரசபை கேட்டுக்கொண்டுள்ளது.






# மனிதனின் நல்லிணக்கம் விலங்குகளை நோக்கி வெளிப்பட வேண்டும்!

**(உலக விலங்கு தினம் - ஒக்ரோபர் 4)**

மனிதனின் வாழ்க்கை விலங்குகளுடன் இணைந்தே தொடங்கியது என்று கூறலாம். நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அவற்றின் பங்கு மறுக்க முடியாதது. உணவு, உழைப்பு, பாதுகாப்பு, நட்பு, அன்பு எல்லாவற்றிலும் விலங்குகள் மனிதனுக்கு துணையாக இருந்துள்ளன. ஆனாலும், இன்று அவை பாதுகாப்புக்காக மனிதனையே நாடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை நினைவூட்டும் நாளாகவே ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 4 அன்று “உலக விலங்கு தினம்” கொண்டாடப்படுகிறது.

இந்த நாளின் முக்கிய நோக்கம், உலகெங்கிலும் உள்ள விலங்குகளின் நலத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவது ஆகும். விலங்கு நலனுக்காகப் பாடுபடும் இயக்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து உலகம் முழுவதும் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் பாதுகாப்பான சூழல் உருவாக்குவதே இதன் பிரதான இலக்கு. இந்த நாள் தேசியம், மதம், நம்பிக்கை, அரசியல் என எந்த வேறுபாடுமின்றி உலகளவில் கொண்டாடப்படும் ஒரு சர்வதேச அன்பு நாள் என்று கூறலாம்.

விலங்குகள் மனிதனின் வாழ்வின் துணை ஆதிகால மனிதன் விலங்குகளுடன் வாழ்ந்து வந்தான். வேட்டை, பயிரிடுதல், போக்குவரத்து, ஆடை தயாரித்தல் அனைத்திலும் அவை பங்காற்றின. ஆனால் காலப்போக்கில் தொழில்நுட்ப வளர்ச்சி, காடுகள் அழிப்பு, வேட்டையாடுதல் ஆகியவை விலங்குகளின் வாழ்க்கையை பெரிதும் பாதித்தன. பல இனங்கள் அழிவின் விளிம்பில் தள்ளப்பட்டன. இதனை உணர்ந்த சிலர், விலங்குகளுக்காக உலகளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தில் “உலக விலங்கு தினம்” ஒன்றை உருவாக்கினர்.

**வரலாற்றுப் பின்னணி**

உலக விலங்கு தினம் முதன்முதலில் 1925 மார்ச் 24 அன்று ஜேர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற்றது. இதை ஹெய்ன்ரிச் ஸிம்மெர்மான் என்ற விலங்கு ஆர்வலர் ஏற்பாடு செய்தார். அவர் ஒரு விலங்கு ஆய்வாளர் மற்றும் எழுத்தாளர். விலங்குகளின் மீதான மனித அக்கறையை எழுப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் இந்த நிகழ்வைத் தொடங்கினார். அந்த நிகழ்வில் 5000 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்தில் இந்நாள் ஒக்ரோபர் 4 அன்று நடத்தத் திட்டமிடப்பட்டது. அது புனித பிரான்சிஸ் ஆஃப் அஸிசியின் நினைவு நாள். அவர் விலங்குகளின் பாதுகாவலராக போற்றப்படுகிறார். ஆனால் அந்நாளில் நிகழ்வுக்கான இடம் கிடைக்காததால் 1925 இல் மார்ச் 24 அன்று கொண்டாடப்பட்டது. பின்னர் 1929 ஆம் ஆண்டு அது புனித பிரான்சிஸ் அவர்களின் நினைவு நாளான ஒக்ரோபர் 4 இற்கு மாற்றப்பட்டது.

விலங்குகளுக்காக வாழ்ந்த மனிதர் ஹெய்ன்ரிச் ஸிம்மெர்மான் தனது வாழ்நாள் முழுவதும் விலங்குகளின் நலனுக்காகப் பாடுபட்டார். “மனிதனின் நல்லிணக்கம் விலங்குகளை நோக்கி வெளிப்பட வேண்டும்” என்ற அவரது கருத்து இன்றும் உலகெங்கிலும் பரவி வருகிறது. அவரது தொடர்ச்சியான முயற்சியால் 1931 மே மாதத்தில் இத்தாலியின் பிளாரன்ஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச விலங்கு பாதுகாப்புக் கூட்டத்தில், ஒக்ரோபர் 4 ஐ உலக விலங்கு தினமாக அறிவிக்க தீர்மானம் எடுக்கப்பட்டது. இது பின்னர் உலகளவில் பரவிய ஒரு இயக்கமாக மாறியது.

இன்று பல நாடுகளில் உலக விலங்கு தினம் பெரும்

தொடர்ச்சி▼

# மனிதனின் நல்லிணக்கம் விலங்குகளை நோக்கி வெளிப்பட வேண்டும்!

**தொடர்ச்சி▲**

உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

ஆஸ்திரேலியா (1948): விலங்குகளுக்கான பாது காப்பு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன் நாய்களுக்கு தங்கும் இல்லங்கள் அமைக்கப்பட்டன.

பின்லாந்து (2002 முதல்): பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்வுகள்ளூபவ் "விலங்குகள் வாரம்" போன்ற நிகழ்ச் சிகள் நடந்து வருகின்றன.

போலந்து (2006): ஒக்ரோபர் 4 ஆம் திகதியைச் சட்டரீதியாக விலங்கு தினமாக அறிவித்தது.

அர்ஜென்டினா (1908): அந்த நாட்டின் விலங்கு உரிமை இயக்கத்தின் முன்னோடி இறந்த நாள் ஏப்ரல் 29 என்பதால் அந்த நாளே விலங்கு தினமாக கொண் டாடப்படுகிறது.

புனித பிரான்சிஸ் ஆஃப் அஸிசி – விலங்குகளின் காவலர் இவர் புனித பிரான்சிஸ் (1181- 1226) இத்தாலி யைச் சேர்ந்த மதகுரு. "அனைத்து உயிர்களும் கடவுளின் படைப்புகள்" என்ற கருத்தை உலகுக்கு எடுத்துரைத்தவர். அவர் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றோடு அன்பாக உரையாடிய வரலாறு கொண்டவர். அதனால் உலகம் அவரை "விலங்குகளின் காவலர்" என மதிக் கிறது. அவரின் நினைவு நாள் ஒக்டோபர் 4 என்பதால் அந்த நாளே உலக விலங்கு தினமாக அறிவிக்கப்பட்டது.

**உலக விலங்கு தினத்தின் நோக்கங்கள்**

இந்த நாள் வெறும் கொண்டாட்டத்துக்காக அல்ல. அதற்குப் பின்னால் பல முக்கிய நோக்கங்கள் உள்ளன:

01. விலங்குகளின் நிலையை உயர்த்துதல்: விலங் குகள் உணர்வுள்ள உயிரினங்கள் என்பதை உலகம் உணர வேண்டும். அவற்றுக்கும் வலி, உணர்ச்சி, அன்பு, தேவைகள் ஆகியவை உள்ளன என்பதை ஏற்றுக்கொள்வது முக்கியம்.

02. நலத் தரத்தை மேம்படுத்துதல்: உலகெங்கும் விலங்குகளுக்கான சட்டங்கள் வலுப்பெற வேண்டும். விலங்குகள் மீது சுரண்டல், கொடுமை ஆகியவை நிறுத்தப்பட வேண்டும்.

03. விழிப்புணர்வு ஏற்படுத்துதல்: பள்ளிகள்ளூபவ் ஊடகங்கள்ளூபவ் சமூகங்கள் வழியாக விலங்குகள் குறித்த கல்வி வழங்கப்பட வேண்டும்.

04. விலங்கு நல இயக்கங்களை ஒன்றிணைத்தல்: உலகம் முழுவதும் விலங்கு நலத்துக்காகப் பாடுபடும் மனிதர்களை ஒன்றிணைத்து ஒரு சக்தியாக மாற்ற வேண்டும்.

**ஏன் இந்நாள் அவசியம்?**

விலங்குகள் சுற்றுச்சூழலின் முக்கிய அங்கம். ஆனால் இன்று பல விலங்குகள் வேட்டையாடல், காடழிப்பு, தொழில்துறை மாசு போன்ற காரணங்களால் அழிந்து வருகின்றன. இதனால் உயிரின பன்முகத் தன்மை பாதிக்கப்படுகிறது. உலக விலங்கு தினம் ஆண்டுக்கு ஒரு முறை என்றாலும் உலக மக்களின் கவனத்தை இந்தப் பிரச்சினைகளுக்குத் திருப்புகிறது. அழிந்துவரும் இனங்களைப் பாதுகாக்கும் நடவடிக் கைகள் இந்நாளில் வலுப்பெறுகின்றன. மேலும், மனிதனும் விலங்குகளும் அமைதியாகச் சகவாழ முடியும் என்ற எண்ணத்தை வளர்க்கிறது.

விலங்குகள் சுற்றுச்சூழல் சமநிலையின் அடித்தளம் விலங்குகள் இல்லையெனில் இயற்கையின் சமநிலை சிதைந்து விடும். ஒவ்வொரு உயிரினமும் உணவுச் சங்கிலியில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. ஒரு இனத் தின் அழிவு பல உயிரினங்களின் வாழ்வையும் பாதிக்கக் கூடியது.

பூச்சிகள், பறவைகள், வௌவால்கள் போன்றவை தாவரங்களில் மகரந்தச் சேர்க்கை மற்றும் விதை பரவலுக்கு உதவுகின்றன. இதனால் உணவு உற்பத்தியும் அதிகரிக்கிறது. அதேபோல் வேட்டையாடிகள் தாவர உண்ணிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தி காடுகளைப் பாதுகாக்கின்றனர். விலங்குகள் இல்லை யெனில் இயற்கைச் சுழற்சி தடைப்படும். விலங்குகள் கார்பன் சுழற்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. யானைகள், திமிங்கலங்கள் போன்ற பெரிய விலங்குகள் இயற்கைச் சமநிலையைத் தக்கவைத்தல் மற்றும் கார்பன் சேமிப்பில் பங்கு பெறுகின்றன. இவ்வாறு விலங்குகளைப் பாதுகாப்பது காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் இயற்கை சார்ந்த தீர்வாகும். விலங்குகள் மனித வாழ்க்கையின் அடிப்படையையே உருவாக் குகின்றன.

நமது உணவுப் பாதுகாப்பு, மருந்துத் துறை, சுற்றுலா, விவசாயம் ஆகிய அனைத்திலும் அவை பங்காற்று கின்றன. உயிரியல் பன்முகத்தன்மை குறைந்தால் மனித ஆரோக்கியமும் பாதிக்கப்படும். அதனால், விலங்குகளைப் பாதுகாப்பு என்பது வெறும் கருணைச் செயல் அல்ல அது நம் எதிர்காலத்திற்கான முதலீடு ஆகும்.

மனிதன் – விலங்கு உறவு ஒரு நாகரிகத்தின் அடை யாளம் விலங்குகளை நேசிப்பது மனிதனின் உயர்ந்த பண்பாகும். மனிதாபிமானம் கொண்ட சமூகம்தான் விலங்குகளையும் உயிர்களாக மதிக்கும். ஹெய்ன்ரிச் ஸிம்மெர்மான் கூறியது போல் "விலங்குகளும் மனிதர்களைப் போல வாழ்வதற்கு உரிய உரிமை பெற்றவை". நாளை உலக விலங்கு தினம் ஒவ்வொரு வருக்கும் அந்த உண்மையை நினைவூட்டுகிறது.

நாம் வாழும் பூமி நம்முடையது மட்டுமல்ல அனைத்து உயிர்களுடையதுமே. விலங்குகளை நேசிக்கவும் அவற்றுக்கு பாதுகாப்பான சூழலை வழங்கவும் நாம் ஒவ்வொருவரும் முயல வேண்டும். அப்போதுதான் உண்மையில் மனிதாபிமானம் நிறைந்த ஒரு உலகம் உருவாகும். உலக விலங்கு தினம் என்பது ஒரு விழா அல்ல. அது மனித மனச்சாட்சியை எழுப்பும் நாள்.

ஒவ்வொருவரும் விலங்குகளுக்கு அன்பும் மரியாதையும் காட்டும்வரை இந்தப் பூமி வாழ்வதற்கு உரிய அழகான இடமாக இருக்கும்.

**ஜெகன் ஹிமாத்ரி,**
ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.



# வுமென்ஸ் கோப்ஸ் அமைப்பின் சிறுவர் தினக் கொண்டாட்டம்

(நூருல் ஹுதா உமர் )

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வுமென்ஸ் கோப்ஸ் அமைப்பின் (Women's Corps - Sri Lanka) ஏற்பாட்டில் சிறுவர் தினக் கொண்டாட்டம் நேற்று முன்தினம் (01) புதன்கிழமை சாய்ந்த மருது பொலிவேரியன் கலாச்சார மத்திய நிலைய கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

சர்வதேச சிறுவர் தினம் “அன்பால் போஷியுங்கள் – உலகை வழிநடத்துங் கள்” எனும் தொனிப்பொருளில் இடம் பெற்றது.

வுமென்ஸ் கோப்ஸ் அமைப்பின் தலைவி ஏ.பாத்திமா றிகாஸா ஷர்பீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். முகம்மது ஆஷிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் விஷேட அதிதியாக சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப் பாளர் அஸ்மா அப்துல் மலீக், கௌரவ அதிதிகளாக சாய்ந்தமருது வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே.சனூஸ் காரியப்பர், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக் களத்தின் பதில் பிரதி மாகாணப் பணிப் பாளர் பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், காரைதீவு பிரதேச செயலக கணக்காளர் ஏ.எல். பாத்திமா றிம் ஸியா, தொழிலதிபரும் கலைஞருமான ஏ.எல். ஆப்தீன், சமூக சேவை உத்தி யோகத்தர் ஏ.ஆர். றொஸ்மி, சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ. மஜீத், அக்கரைப்பற்று நிலா மியா ஜுனியர் பாடசாலையின் ஆசிரியை ஏ.எல். பாத்திமா நுஸ்ஹா, ஓய்வுபெற்ற ஆசிரியை மௌலவியா எம்.எஸ்.எஸ். நிஸ்ரினா ஆகியோர் கலந்து கொண்டனர்.









# முல்லைத்தீவில் தொழில் முயற்சியாளருக்கு பிரதேச செயலக ரீதியாக விருதுகள் வழங்கல்

**(பா.சதீசன் )**

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சிறந்த சிறு தொழில் முயற்சியாளர்களுக்கான விருது வழங்கல் விழா நேற்று (02) புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சிறந்த தொழில் முயற்சியாளர்கள் 8 பேரும், முன்னோடி தொழில் முயற்சியாளர்கள் 5 பேரும் என மொத்தம் 13 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட 27 பேருக்கு ஊக்கச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் முயற்சியாளர்களுக்குப் பிரதேச செயலக ரீதியாக வழங்கப்பட்ட முதலாவது விருது வழங்கல் நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி கி.டென்சியா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலாளர் (நிர்வாகம்) சி. குணபாலன், கௌரவ விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் (காணி) சி.ஜெயகாந், வடக்கு மாகாண தொழில் துறை பணிப்பாளர் திருமதி க. துஷ்யா , சிறப்பு விருந்தினர்களாக கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவிப் பணிப்பாளர் சி. சடாச்சரன், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு பயிற்சி உத்தியோகத்தர் திருமதி உ. தேவமலர், முல்லைத்தீவு விதாதா உத்தியோகத்தர் ம. தவேந்திரன், முல்லைத்தீவு கைத்தொழில் பேரவையின் தலைவர் எஸ். பிரதீபன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தபிசாளர் வே. கரிகாலன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தொழில் முயற்சியாளர்கள், சாதனையாளர்கள் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.











# கேதார கௌரி விரதம்!

■ எஸ்.கீதபொன்கலன்

கேதார கௌரி காப்பு விரதம் நேற்று (02) வியாழக்கிழமை ஆரம்பமாகியது. எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிறைவு பெறுகின்றது.

சகல சௌபாக்கியங்களும் நல்கி எமக்கு எதுவித துன்பமும் ஏற்படாது "பாதுகாப்பு" தரும் காப்பு விரதம் கேதார கௌரி விரதம்.

இவ்விரதம் புரட்டாசி மாதத்தில் சுக்கிலபக்ஷ அட்டமியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தேய்பிறை சதுர்த்தசியில் முடிவுறுகின்றது. இருபத்தொரு நாள்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். இந்த விரதத்தை அனுஷ்டிப்போர் சிவ-சக்தி அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று தீர்க்க சுமங்கலியாக வாழ்ந்து வீடுபேறடைவர் என புராணங்கள் கூறுகின்றன.

இவ் விரதத்தை ஆண், பெண் இருபாலாரும் அனுஷ்டிக்கின்றனர். மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்க வேண்டியும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இறுதி நாளன்று அந்த நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

"கேதாரம்" என்பது இமயமலைச் சாரலில் உள்ள ஒரு சிவதலம். இந்தத் தலத்தில் எழுந்தருளி இருக்கும் சிவனை நினைத்து பார்வதி தேவியாகிய "கௌரி" இவ் விரதத்தை மேற்கொண்டதால் இந்தப் பெயர் உண்டாயிற்று. சிவனுக்கு சமமான நிலையில் சக்தி அமையும்போது அது பராசக்தி எனப்போற்றப்படுகின்றது.

### கேதாரகௌரி விரதம் அனுஷ்டிக்கும் முறை

கேதார கௌரி விரதம் ஆலயத்தில் அனுஷ்டிப்பவர்கள் கேதார கௌரி விரத ஆரம்பதினத்திலன்று கௌரி அம்பிகை சமேத கேதீஸ்வரநாதரின் சன்னிதானத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கும்பத்தின் முன்பதாக அமர்ந்திருந்து பூசை வழிபாட்டிற்குரிய வலதுகையில் ஞானவிரலாகிய மோதிரவிரலில் தர்ப்பைப் பவித்திரம் அணிந்து சிவாச்சாரியர் மூலம் உங்கள் பிறந்த நட்சத்திரம் பெயர் ஆகியவற்றைக் கூறி குடும்பத்தவர் அனைவரது நன்மைகளுக்காகவும் விரத பூஜைகளை நடத்துவதாகச் சங்கற்பம் செய்து ஸ்ரீ வரசித்தி விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்தல் அவசியமாகும்.

விரத தினங்களிலே பகலில் உணவு தூக்கம் ஆகியவற்றைத் தவிர்த்து, பழச்சாறு பால், நீர்மோர் ஆகியவற்றை மட்டுமே அருந்தி தெய்வ சிந்தனையுடன் கழித்து, மாலையில் ஆலயத்தில் கௌரி மீனாட்சி சமேதரான கேதீஸ்வரப் பெருமானுக்கு சிறப்பாக நடைபெறும் அபிஷேக ஆராதனைகளிலும், அர்த்தநாரீஸ்வரராக இறைவனுக்கு நடைபெறும் அர்ச்சனை வழிபாடுகளிலும் கலந்துகொள்வதுடன், கும்பத்தில் 21 தினங்களாக பூஜையில் வைக்கப்பட்டுள்ளது.

இருபத்தொரு இழைகளால் உருவாக்கப்பெற்றுள்ள நோன்புக் கயிற்றில் இருக்கும் 21 முடிச்சுக்களுக்கு உரிய (கிரந்தி பூஜை) சிறப்பு மந்திரங்களை குரு மூலம் உபதேசமாகக் காதினால் கேட்டு அதனை திரும்ப உங்கள் வாயால் பக்தியுடன் உச்சரித்து அதன் பின்னர் சிவலிங்கப்பெருமானை சிவலிங்காஷ்டக ஸ்தோத்திரத்துடன் கையில் பூவும் நீரும் ஏந்தி பிரதட்சிணம்செய்து கும்பத்துக்கு மலர்சொரிந்து வழிபடுவது அவசியமாகும்.

இன்றியமையாத காரணங்களால் தினமும் வரமுடியாவிடின் இயன்ற தினங்களில் வந்து தவறவிட்ட பிரதட்சிண நமஸ்காரங்களையும் குறைவின்றி நிறைவேற்றிப் பூர்த்தி செய்வது அவசியமாகும். இறுதி நாளன்று பழைய நோன்புக்கயிற்றை நீக்கிப் புதிய நோன்புக் கயிற்றைக் கேதாரி கௌரி ரட்சைக் காப்பாக ஆண்கள் குருமூலம் வலது கையிலும், பெண்கள் குருமூலம் அல்லது கணவர் மூலம் அல்லது சுமங்கலிகள் மூலம் இடது கையில் அல்லது கழுத்தில் அணிந்து கொள்ளலாம். அன்றையதினம் பூரணமான உபவாசமாக இருந்து மறுநாள் பாரணம் செய்வது மிகவும் உத்தமம்.

ஒருசிலர் ஆரம்பதினத்தில் வந்து சங்கல்பம் செய்து விரதத்தைத் தொடங்கிப் பின் இறுதி மூன்று தினங்களில் அனைத்து பிரதட்சிண நமஸ்காரங்களையும் செய்து முடித்து குருவழிபாட்டுடன் நோன்புக் கயிறு வாங்கி அணிவர். பழைய காப்புக் கயிறை நீர் நிலைகளில் போடவும். பெண்களுக்கு இறுதி நாளில் ஆலயத்திற்கு வந்து பூர்த்தி செய்ய இயலாது, மாத விலக்கினால் தடங்கல் ஏற்பட்டால் அசுத்தமான மூன்று தினங்களும் ஒருவேளை உணவுடன் விரதமாக இருந்து நான்காம் நாள் மங்கள ஸ்நானம் செய்து ஆலயத்தில் வந்து

தொடர்ச்சி▼



# கேதார கௌரி விரதம்!

**தொடர்ச்சி▲**

பிரதட்சண நமஸ்காரங்களை நிறைவு செய்து காப்பு அணியலாம். இதற்காக இன்னொரு அமாவாசை வரும்வரை காத்திருப்பது அவசியமில்லை.

இவ்விரதத்தை ஏனைய ஒருசில விரதங்களைப்போல இத்தனைவருடகாலம் மட்டுமே அனுஷ்டிக்கவேண்டு மென்ற நியதி கிடையாது. தொடர்ந்து அனுஷ்டிக்கும்போது வயோதிபத்தால் தளர்ச்சியடைந்தவர்களும் நோயுற்று உடல் நலிவடைந்வர்களும் காலையிலேயே பக்தியுடன் பூஜைவழிபாடுகளை நிறைவேற்றி உச்சிப் பொழுதில் பால், பழம், அதிரசம் பலகாரங்களை உட்கொள்வதும் தவறல்ல.

புரட்டாதி மாதம் சுக்ல பட்ட தசமியில் இவ்விரத்த்தை ஆரம்பிக்க வேண்டும். இருபத்தோரிழைகள் கொண்டதும் இருபத்தொரு முடிச்சுக்கள் கொண்டதுமான நூலால் உருவாக்கப்பட்ட மந்திரக் கயிற்றைச் செய்துகொண்டு அன்றுமுதல் சிவபெருமானை மண்ணால் ஆக்கப்பட்ட விம்பத்திலும், கும்பத்திலும் பூஜித்து இவ்விரத்த்தை அனுஷ்டிக்க வேண்டும்.

தூய்மையான அழகான இடத்திலே மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தை அமைத்து கும்பம் வைத்து பூக்கள், வில்வம் முதலியனவற்றால் அர்ச்சனை செய்ய வேண்டும். ஒவ்வொரு நாளும் கேதாரேஸ்வரனுக்கு இருபத்தொரு எண்ணிக்கை கொண்ட அப்பம், வடை, பழம், பாக்கு, வெற்றிலை, பாயாசம், சர்க்கரை அன்னம், புளி அன்னம் முதலிய நைவேத்தியங்கள் வைத்து, தூபதீபம் காட்டியும் சோடோபோசார பூஜை செய்தும் கேதேஸ்வரனை வழிபடுதல் வேண்டும்.

இருபத்தொரு நாளும் பூஜையில் வைக்கப்பட்ட இருப்பத்தொரு முடிச்சுக்கள் கொண்ட நூலை இருபத்தோராவது திதியான அமவாசைத் திதியில் இடது கையில் கட்டிக்கொள்ளவேண்டும்.

தமது ஆன்ம ஈடேற்றத்துக்காகவும் தமது குடும்பத்த வரின், ஆயுள் விருத்தி, செல்வ விருத்தி, குடும்ப அன்னியோன்னிய அபிவிருத்தி, மனச்சங்கடங்கள் நீங்கி சந்தோஷம் பெருகவும், குழந்தைகளின் கல்வி, உத்தியோகம் பெறவும், சுபமங்கள திருமணம் கைகூட வும், குழந்தைப் பாக்கியப்பேறுகள் கிட்டவும் இவ்விர தத்தை இயன்றவரை விடாது அனுஷ்டிப்பது உத்தமம் ஆகும்.

இவ்வாறு கௌதம முனிவர் விரதமஹிமையை உலக மாதாவாகிய கௌரிதேவிக்கு உபதேசம் செய்ய, அதைக்கேட்டு அன்னை கேதாரேஸ்வரப்பெருமானை நினைந்து தவமிருந்து வழிபட, இறைவன் காட்சிகொடுத்து தேவிக்குத் தனது இடப்பாகத்தைக் கொடுத்து தன்னுடன் இணைத்து அர்த்தநாரீஸ்வரனாகி "உமையொருபாகன்" என்னும் சிறப்புத் திருநாமத்தைப் பெற்றார் என்பது வரலாறு.

தேவியின் வேண்டுதலால் இவ்விரதத்தை அனுஷ்டிக் கும் அனைவருக்கும் தம்பதிகள் சேமமாக இருத்தலும், பிணிநீங்கலும், வறுமை நீங்கி செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறு வதற்கும் சிவனருளைப் பரிபூரணாகப் பெறுவதற்கும், கணவனும் மனைவியும் கருத்தொருமித்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே இவ்விரத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.



# விஜய்யை கூட்டணிக்குள் கொண்டுவருவதற்கு கரூர் சம்பவத்தை பா.ஜ.க. பயன்படுத்துகிறது

## சீமான் தெரிவிப்பு



"கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புகள் விஜய் வருகையால் ஏற்பட்டதுதான். ஆனால், விஜய்யை எப்படியாவது கூட்டணிக்குள் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, கரூர் சம்பவத்துக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என பா.ஜ.க. சொல்கிறது. இது அரசியல் அல்ல அசிங்கம்."

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய சீமான்,

"தி.மு.கவுக்கும், பா.ஜ.கவுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. தி.மு.க. தனது கட்சியில் 90 சதவீதம் இந்துக்கள் உள்ளதாக சொல்கிறது. இந்த தேர்தலில் இஸ்லாமிய, கிறிஸ்தவர்களின் வாக்கை எளிதாக திமுகவால் பெற முடியாது.

ஒரு நடிகரை பார்க்க வந்த கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். அதற்கு விசாரணைக் குழுவை பா.ஜ.க. அனுப்பியுள்ளது. ஆனால், தூத்துக்குடியில் மக்களே போராடிய போது ஏன் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது?. அப்போது பொலிஸ், மாவட்ட ஆட்சியர் போராடியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கலாமே?. வன்முறை ஏற்பட்டாலும் கூட கண்ணீர் புகைக்குண்டு வீசித்தானே கூட்டத்தை கலைத்திருக்க வேண்டும். அதற்கெல்லாம் பா.ஜ.க. விசாரணைக்குழு வந்திருக்க வேண்டியதுதானே?.

கரூர் துயரம் ஓராண்டுக்கு முன்பு நடந்திருந்தால், இவ்வளவு அக்கறை காண்பித்திருக்க மாட்டார்கள். இப்போது சில மாதத்தில் தேர்தல் வருவதால், அரசியல் செய்வதற்காக உண்மை கண்டறியும் குழுவை உடனே அனுப்பியுள்ளார்கள்.

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்புகள் விஜய் வருகையால் ஏற்பட்டதுதான். அதற்கு அவர் பொறுப்பேற்கவே இல்லையே?. 'இந்த சம்பவத்துக்கு காரணமாகிவிட்டேன், மன்னித்துக் கொள்ளுங்கள், இது வலிமிகுந்ததாக உள்ளது, இனி நடக்காமல் பார்த்துக்கொள்கிறேன்' என்று அவர் வருத்தம் கூட தெரிவிக்கவில்லை. 'அங்கு நடக்காதது இங்கு ஏன் நடந்தது, அரசுதான் பொறுப்பேற்க வேண்டும், சின்ன இடத்தை கொடுத்தார்கள்' என விஜய் சொல்கிறார்.

நீங்கள் கேட்ட இடம்தானே இது. அங்குதானே எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு முன்னர் கூட்டம் நடத்தினார். சிறிய இடமாக இருந்தால், அந்த இடம் வேண்டாம் என சொல்லியிருக்க வேண்டியதுதானே. கரூருக்கு அன்று வந்தவுடனே பொலிஸ்/க்கு நன்றி தெரிவித்து விஜய் பேசினார். சாவு விழுந்தவுடன் அந்த பொலிஸ் மீது ஏன் பழிபோடுகிறார். இதனை கேட்கும் போது கடுமையான கோபம் வருகிறது.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சியில் கல்வியாளர்களை, சாதனையாளர்களை அழைத்து பேச வைக்காத தமிழக அரசு, திரைப்பட நடிகர்களை, இயக்குநர்களை பேச வைக்கிறார்கள். கல்வி விழாவுக்கு கூட நடிகர்களை அரசு அழைத்தால், அப்புறம் நடிகர்கள் ஏன் நாடாள துடிக்க மாட்டார்கள். நடிகர்களுக்கு கூட்டம் கூடுவதற்கு இவர்கள்தான் முக்கிய காரணம்.

விஜய் பேசுவதை அவரின் ரசிகர்கள் கேட்பதே இல்லை, கத்திக்கொண்டே இருக்கிறார்கள். முதற்காட்சி சினிமாவுக்கு போவதுபோல விஜய் கூட்டத்துக்கு வருகிறார்கள், இது தெருக்கூத்து.

விஜய்யை எப்படியாவது கூட்டணிக்குள் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, கரூர் சம்பவத்துக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என பா.ஜ.க. சொல்கிறது. இது அரசியல் அல்ல, அசிங்கம்.

நாங்கள் வரும் தேர்தலில் தனித்தே போட்டியிட உள்ளோம், 150 வேட்பாளர்களை அறிவித்துவிட்டேன். இப்போது தி.மு.கவுக்கும் த.வெ.கவுக்கும் இடையே தான் போட்டி என விஜய் சொல்கிறார். ஈரோடு கிழக்கு தொகுதியில் அவர் எங்கே போனார். அப்போது நாங்கள்தான் களத்தில் நின்றோம்." எனத் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் அத்துமீறினால் பதிலடி; அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை

குஜராத்தின் ரான் ஆப் கட்ச் பகுதியில் உள்ள சர் கிரீக் கடல் எல்லைப் பகுதியில், பாகிஸ்தான் அத்துமீறி செயல்பட்டால், பதிலடி கொடுக்கப்படும் என மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



குஜராத்தின் ரான் ஆஃப் கட்ச் பகுதியில் சர் கிரீக் என்ற நீரிணைப்பு பகுதி உள்ளது. இது இந்தியா – பாகிஸ்தான் இடையே கடல் எல்லைப் போல் உள்ளது. இப்பகுதியின் எல்லைப் பிரச்சினை இரு நாடுகள் இடையே நீண்டகாலமாக உள்ளது. இப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண இந்தியா பல முறை முயன்றது. ஆனால் பலன் இல்லை.

இந்நிலையில் சர் கிரீக் பகுதியில் இராணுவ கட்டமைப்புகளை பாகிஸ்தான் விரிவுபடுத்துகிறது. இது குறித்து பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவிக்கையில்,

"எல்லைப் பகுதிகளை இந்திய இராணுவமும், எல்லை பாதுகாப்பு படையும் (பி.எஸ்.எப்) தொடர்ந்து பாதுகாத்து வருகிறது. சர் கிரீக் பகுதியில் பாகிஸ்தான் அத்துமீறினால், இந்தியா பதிலடி கொடுப்பது நிச்சயம். இது வரலாறு மற்றும் புவியமைப்பை மாற்றியமைக்கும். கடந்த 1965ஆம்ஆண்டுபோரில்இந்தியஇராணுவம் லாகூர் வரை வந்து தனது திறனை நிரூபித்தது. சர் கிரீக் வழியாக கராச்சி செல்ல ஒரு வழித்தடம் உள்ளதை பாகிஸ்தான் நினைவில் கொள்ள வேண்டும்.

ஒபரேஷன் சிந்தூரிலும், எதிரிகளின் மறைவிடத்தை அழித்து இந்தியா தனது திறனை வெளிப்படுத்தியது. நமது இறையாண்மைக்கு, உலகில் உள்ள எந்த சக்தியும் சவால் விடுக்க முடியாது. தீவிரவாதமாக இருந்தாலும், வேறு எந்த பிரச்சினையாக இருந்தாலும், அதை முறியடிக்கும் திறன் இந்தியாவுக்கு உள்ளது.

ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது லே விலிருந்து சர் கிரீக் வரை அத்துமீறும் பாகிஸ்தானின் முயற்சி முறியடிக்கப்பட்டது. பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு கருவிகளை இந்திய இராணுவம் முற்றிலும் அழித்தது. இதன் மூலம், பாகிஸ்தான் மீது எங்கும் எப்போதும் தாக்குதல் நடத்தி பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பதை உலக நாடுகள் அறிந்தன. இந்தியாவுக்கு வலிமை இருந்தும், போர் தொடுப்பது நாட்டின் நோக்கம் அல்ல. தீவிரவாதிகள் மீது மட்டும் தாக்குதல் நடத்தி, நமது ராணுவம் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டது. ஆனாலும், தீவிரவாதத்துக்கு எதிரான நமது சண்டை தொடர்கிறது."

என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க அழுத்தங்களுக்கு இந்திய அரசு அடிபணியாது

## ரஷ்ய ஜனாதிபதி புடின் உறுதி

அயலக அழுத்தங்களுக்கு இந்தியா அடிபணியாது என ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

இந்திய பொருள்களுக்கு 50 சதவீதம் இறக்குமதி வரியை டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு நிர்வாகம் விதித்துள்ள சூழலில், அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தெற்கு பகுதியில் உள்ள சோச்சி நகரில் சர்வதேச அளவிலான பாதுகாப்பு தொடர்பான நிகழ்வு நடந்தது. இந்தியா உள்ளிட்ட 140 நாடுகள் பங்கேற்ற இந்த நிகழ்வில் புடின் உரையாற்று கையில்,

“ரஷ்யாவின் வர்த்தக ரீதியான கூட்டாளிகள் மீது அதிக வரிகள் விதிக்கப்பட்டால், அது உலக அளவில் எரிசக்தி பொருள்கள் மீதான விலையை உயர்த்தும். இதன் காரணமாக அமெரிக்க ஃபெடரல் மத்திய ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை அதிகரிக்க வேண்டிய சூழல் ஏற்படும். மேலும்,



இதனால் அமெரிக்க பொருளாதாரம் மந்தமாகும்.

எனது இந்திய பயணத் திட்டத்தை எதிர்நோக்கி உள்ளேன். இந்தியாவுடன் எங்களுக்கு எப்போதும் சிக்கல் இருந்ததில்லை. நிச்சயம் அயலக அழுத்தங்களுக்கு இந்திய தேசம் அடிபணியாது. அது மாதிரியான நகர்வை பிரதமர் மோடி அனுமதிக்கமாட்டார். இந்திய தேசம் ரஷ்யாவில் இருந்து எரிசக்தி பொருட்களை வாங்குவதை நிறுத்தினால் சுமார் 9 பில்லியன் முதல் 10 பில்லியன் டாலர்கள் வரை ரஷ்யாவுக்கு இழப்பு ஏற்படும்.

அமெரிக்க வரிவிதிப்பால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ரஷ்யா ஈடு செய்யும். அந்த வகையில் இந்தியாவில் இருந்து விவசாய பொருட்கள் மற்றும் மருந்துகளை ரஷ்யா வாங்கும். இதோடு நட்பு நாடு என்ற அந்தஸ்தும் இருக்கும். ஒருபக்கம் ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி விவகாரத்தில் இந்தியாவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்கிறது. அதே நேரத்தில் வேறு சிலவற்றில் ரஷ்யாவை சார்ந்தே அமெரிக்கா உள்ளது. அமெரிக்க சந்தைக்கு தேவைப்படும் உக்ரைனியத்தை விநியோகிக்கும் நாடுகளில் ரஷ்யா இரண்டாம் இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.” – என்றார்

# ஆப்கானின் வெளிவிவகார அமைச்சர் அடுத்த வாரம் இந்தியாவுக்கு விஜயம்

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, தலிபான் நிர்வாகத்தின் வெளியுறவு அமைச்சர் ஆமிர் கான் முத்தாகி அடுத்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15 அன்று தாலிபான்கள் ஆப்கானிஸ்தானை அதிகாரபூர்வமாக கைப்பற்றியது. அதன் பின்னர் தலிபான் அரசின் அமைச்சர் ஒருவர் இந்தியாவுக்கு வருகை தருவது இதுவே முதன்முறையாகும்.

தலிபான் நிர்வாகத்தின் வெளியுறவு அமைச்சர் ஆமிர் கான் முத்தாகி அடுத்த வாரம் இந்தியாவுக்கு வருகை தரவுள்ளார் என்று வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர். முத்தாகி ஒக்டோபர் 10 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்தியாவசிய மருந்துகள் மற்றும் விவசாயப் பொருள்களின் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு, இந்தியாவிலிருந்து உதவிகள்



வழங்கப்படுவது குறித்து ஆமிர் கான் முத்தாகியின் வருகையின் போது பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



# மியூனிக் சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தம்

ஜேர்மனியில் உள்ள மியூனிக் சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விமான நிலையத்தை அண்மித்து, ஆளில்லா விமானங்கள் பறந்த நிலையில், விமான நிலைய செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி சுமார் 17 விமானங்கள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், 15 விமானங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இதனால் சுமார் 3,000 பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

அடையாளம் தெரியாத ஆளில்லா விமானங்கள் காரணமாக கடந்த சில வாரங்களாக ஐரோப்பா முழுவதும் பல விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை 03/10/2025

கனடாவின் கல்லூரி மாணவி உயிரிழப்பு; டெஸ்லா மீது குற்றம் சுமத்தும் பெற்றோர்



C3



# ஒன்ராரியோ திரையரங்கில் துப்பாக்கிச் சூடு, தீ வைப்பு

## இந்திய ரசிகர்களுக்கு பெரும் அதிருப்தி



கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள ஒரு திரையரங்கில் இந்திய திரைப்படம் திரையிட்ட ஒரு தியேட்டரில் துப்பாக்கிச்சூடு மற்றும் தீவைப்புத் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

ஒக்வில் நகரில் அமைந்துள்ள இந்த திரையரங்கின் நிர்வாகம், தொடர்ச்சியான வன்முறை சம்பவங்களுக்கும், தாங்கள் திரையிட்ட இந்திய திரைப்படங்களுக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவித்துள்ளது.

இந்தியப் படங்களைத் திரையிடுவது தொடர்பாக மிரட்டல்களையும் நாச வேலைகளையும் நாங்கள் எதிர்கொள்வது இது முதல் முறையல்ல என்று திரையரங்கின் பணிப்பாளர் ஜெஃப் க்னோல் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம், இந்திய திரை ரசிகர்களுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# தட்டம்மை நோயினால் கனடாவில் ஒருவர் சாவு

கனடாவில் தட்டம்மை நோய் காரணமாக இந்த ஆண்டில் இரண்டாவது மரணம் பதிவாகியுள்ளது.

அல்பெர்டாவில் தட்டம்மை பரவல் அதிகரித்துள்ள நிலையில், கருவிலேயே நோய் தொற்றுக்குள்ளான சிசுவொன்று பிறந்து சில நேரத்தில் உயிரிழந்துள்ளது.

இது, மாகாணத்தில் இதுவரை பதிவான முதல் மரணம் ஆகும். குழந்தை பிறந்த சில காலத்திலேயே இறந்துவிட்டதாக அல்பெர்டா முதன்மை மற்றும் தடுப்பு சுகாதார சேவைகள் அமைச்சர் அட்ரியானா லா கிரேஞ்ச் தெரிவித்துள்ளார்.



ஆனால், தாயின் தடுப்பூசி நிலைமையோ, மரணம் நிகழ்ந்த இடமோ குறித்து விவரங்கள் வழங்கப்படவில்லை.

அல்பெர்டாவில் இவ்வருட வசந்த காலத்தில் முதல் தடவையாக தட்டம்மை சம்பவங்கள் அறிவிக்கப்பட்டபோது, இத்தகைய நிலைமை ஏற்படாது என கருதியதாக அமைச்சர்

C2




# இந்தியத் திரைப்படங்கள் திரையிடுவதற்குத் தடை

கனடாவில் திரையரங்கு ஒன்றிற்கு தீவைக்க முயற்சி மற்றும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய திரைப்படங்கள் திரையிடப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி அதிகாலை 5.20 மணியளவில், கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் அமைந்துள்ள Film.ca Cinemas என்னும் திரையரங்குக்கு தீவைக்க சிலர் முயற்சி செய்தனர்.

திரையரங்குகளின் வாசலில் பெட்ரோல் ஊற்றி அவர்கள் தீவைத்த நிலையிலும், அதிஷ்டவசமாக தியேட்டரின் உட்பகுதிக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

கனடாவில் இந்திய அல்லது தெற்காசிய திரைப்படங்கள் திரையிடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகவே இந்த தீவைப்பு முயற்சி நிகழ்ந்ததாக கருதப்படும் நிலையில், அந்த திரையரங்கின் தலைமை நிர்வாக அதிகாரியான துநகக முழெடட, நாங்கள் என்ன திரைப்படங்களை திரையிட விரும்புகிறோமோ, அவற்றை திரையிடுவோம், தெற்காசிய திரைப்படங்களை திரையிட விடாமல் தடுக்க முயல்வோருக்கு அடிபணியமாட்டோம் என்று கூறியிருந்தார்.

ஆனால், நேற்று அதிகாலை 1.50 மணியளவில் மீண்டும் அந்த திரையரங்கம் தாக்குதலுக்குள்ளானது.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் திரையரங்கை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார். தாக்குதல் நடத்தியர்கள் யாரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்நிலையில், தொடர்ந்து இரண்டு முறைதிரையரங்கம்தாக்குதலுக்குள்ளானதால், பாதுகாப்பு கருதி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக Kantara: A Legend Chapter 1 மற்றும் They Call Him OG ஆகிய இரண்டு இந்திய திரைப்படங்களும் திரையிடப்படாது என அந்த திரையரங்கம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து, York Cinemas என்னும் திரையரங்கமும் இந்தியத் திரைப்படங்கள் திரையிடுவது நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே திரைப்படத்தைக் காண முன்பதிவு செய்துள்ளவர்களின் பணம் அவர்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்றும் அந்த திரையரங்கம் தெரிவித்துள்ளது.

## தட்டம்மை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டுள்ளார்.

இது மனதை உடைக்கும் இழப்பு. ஒரு குழந்தையை இழப்பதன் வலியை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அமைச்சர் அட்ரியானா லாகிரேஞ்ச் குறிப்பிட்டார்.

இது, கனடா முழுவதும் பரவியுள்ள தொற்றுநோயுடன் தொடர்புடைய இரண்டாவது மரணம் ஆகும். கடந்த ஜூன் மாதத்தில் ஒன்டாரியோவில், கருவிலேயே தட்டம்மை தொற்றுக்குள்ளான ஒரு குழந்தை உயிரிழந்தது.

அப்பொழுது, தாயார் தடுப்பூசி போடப்படாதவர் எனத் தெரிவிக்கப்பட்டது. அல்பெர்டா மற்றும் ஒன்டாரியோ தற்போது தட்டம்மையினால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட மாகாணங்களாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# கனடாவின் கல்லூரி மாணவி உயிரிழப்பு; டெஸ்லா மீது குற்றம் சுமத்தும் பெற்றோர்



கனடா கல்லூரி மாணவி ஒருவர் டெஸ்லா கார் விபத்தின்போது, காரின் கதவுகளை திறக்க முடியாமல் தீயில் சிக்கி உயிரிழந்த சம்பவத்துக்கு, கார் வடிவமைப்பில் உள்ள குறைபாடே காரணம் என உயிரிழந்த மாணவியின் பெற்றோர் வழக்கு தொடுத்துள்ளனர்.

சான் பிரான்சிஸ்கோ அருகே நடந்த இந்த விபத்தில், 19 வயதான மாணவி கிரிஸ்டா சுகஹாரா என்பவர் சைபர்ட்ரக் காரின் பின் இருக்கையில் பயணித்துள்ளார்.

அவர்கள் பயணித்த காரின் ஓட்டுநர் மது அருந்திய நிலையில் காரை மரத்தில் மோதியதில், காரில் இருந்த நான்கு பேரில் மூவர் உயிரிழந்தனர்.

டெஸ்லா கார்களில், காரை இயக்கும் பேட்டரி தீ விபத்தில் சேதமடையும் போது, கதவுகளை திறக்க பயன்படுத்தப்படும் மின்சாரப் பூட்டுகள் செயல்படுவதில்லை.

மின்சாரம் துண்டிக்கப்பட்டால், கையால் கதவுகளை திறக்கும் வசதி இருந்தும், அதை உடனடியாக கண்டுபிடிப்பது கடினம்.

இந்த வடிவமைப்புக் குறைபாடே, கிரிஸ்டா புகை மற்றும் தீயில் சிக்கி மூச்சுத் திணறி இறக்கக் காரணம் என்று அவரது பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த குறைபாடு குறித்து டெஸ்லா நிறுவனத்திற்கு பல ஆண்டுகளாக தெரியும் என்றும், அவர்கள் உடனடியாக சரிசெய்ய தவறிவிட்டார்கள் என்றும் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த குற்றச்சாட்டு குறித்தும், இந்த வழக்கு குறித்தும் டெஸ்லா நிறுவனம் இதுவரை எந்த பதிலும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் சிரேஷ்ட பிரஜைக்கு இரட்டை அதிர்ஸ்டம் கிடைத்தது




கனடாவில் சிரேஷ்ட பிரஜை ஒருவருக்கு இரட்டை அதிர்ஸ்டம் கிட்டியுள்ளது.

கனடாவின் ஒன்டாரியோ மாகாணம், சட்பெரி நகரத்தைச் சேர்ந்த மார்சல் லெக்லெயர் என்பவர் லொத்தர் சீட்டிலுப்பில் 3 மில்லியன் டொலர் பணப்பரிசு வென்றுள்ளார்.

லெக்லயர் இரண்டாவது தடவையாக இவ்வாறு பெருந்தொகை பணப்பரிசினை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 2017ஆம் ஆண்டு அவர் என்கோர் லொத்தர் சீட்டிலுப்பில் 1 மில்லியன் டொலர் வென்றிருந்தார்.

தற்போது 72 வயதான ஓய்வுபெற்ற லெக்லெயர், டொராண்டோவில் உள்ள லொத்தர் சீட்டு நிறுவனத்திற்கு சென்று தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளார்.

தாம் தொடர்ந்தும் வாரம் தோறும் லொத்தர் சீட்டுகளை கொள்வனவு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வெற்றிச் செய்தியை நண்பர்களுடன் பகிர்ந்தபோது அவர்கள் பெரு மகிழ்ச்சி அடைந்ததாகவும், பெற்ற பரிசுத் தொகையை குடும்பத்துடன் பகிர்ந்து கொள்ளவும் புதிய வீடு வாங்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

“இது அற்புதமான உணர்வு. சொல்ல முடியாத மகிழ்ச்சி,” என லெக்லெயர் மேலும் தெரிவித்தார்.

இந்த வெற்றி சீட்டு சட்பெரி நகரின் லசல் புல்வெளியில் உள்ள சேர்கில் என்ற கடையில் கொள்வனவு செயயப்பட்டுள்ளது.